செ.வெ.எண்: 837/2016 நாள்: 26.11.2016

**இந்திய அரசின் Pradhan Mantri Jan Dhan Yojana திட்டத்தின் கீழ் வங்கி கணக்கு ஆரம்பத்தல், வங்கி கணக்குடன் ஆதார் எண் இணைத்தல், RuPay Card மற்றும் PIN எண் வழங்கும் முகாம். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

இந்திய அரசின் Pradhan Mantri Jan Dhan Yojana திட்டத்தின் கீழ் வங்கி கணக்கு ஆரம்பித்தல். வங்கி கணக்குடன் ஆதார் எண் இணைத்தல், RuPay Card மற்றும் PIN எண் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி அனைத்து PMJDY கணக்குதாரர்கள்/ MGNREGS கணக்குதாரர்கள் மற்றும் இதர சேமிப்பு கணக்கு (SB A/c) வைத்திருக்கும் கணக்குதாரர்களுக்கும் வங்கிகணக்கு எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பொருட்டு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 9 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வைத்து 26.11.2016 முதல் 02.12.2016 வரை (ஞாயிறு நீங்கலாக) தினமும் காலை 10.00 மணி முதல் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமில் PMJDY கணக்குதாரர்கள் / MGNREGS கணக்குதாரர்கள் மற்றும் இதர சேமிப்பு கணக்கு (SB A/c) வைத்திருக்கும் கணக்குதாரர்கள் தங்களது ஆதார் எண், சேமிப்பு கணக்கு எண் ஆகிய விபரங்களை எடுத்து வந்து இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.